**O.S.No. 98/2019**

**Date:06.11.2025**

**பி.வா.சா .1 சண்முகநாதன் (மண்டல துணை வட்டாட்சியர்)**

**4 ம் பிரதிவாதி** தரப்பில் குறுக்கு விசாரணை

செவல் குளம் கிராம புஞ்சை புல எண்.806/5 ஏ குருசாமி நாயக்கர் மகன் செந்தில் குமார் பெயரில் பட்டா எண்.5260 என பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அது என்னிடம் காட்டப்படும் கணினி பட்டா தான் என்றால் சரிதான். **செவல் குளம் கிராம புஞ்சை புல எண்.806/5 ஏ க்கான செந்தில் குமார் பெயரில் உள்ள பட்டா எண்.5260 பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நாளது தேதி வரை செந்தில்குமார் பெயரில் தான் பட்டா இருந்து வருகிறது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வாதியின் வழக்குரை, எனது எதிர்வழக்குரை சங்கதிகளை படித்து பார்த்தேன். சர்வே எண்.932/1 ஆனது கிருஷ்ணசாமி நாய்ககர் மனைவி துர்க்கையம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். துர்க்கையம்மாள் பெயரில் 28.08.2012 லிருந்து இருந்து வருகிறது. அதற்கு முன்பு யார் பெயரில் இருந்தது என்றால் து.கிருஷ்ணசாமி நாயக்கர் பெயரில் இருந்தது அதன் பட்டா எண்.206 ஆகும். மேற்படி பட்டா எண் 09.08.1982 UDR காலத்தில் ஏற்பட்டது. அதற்கு முன்பு தபசில் சொத்து யார் பெயரில் இருந்தது என்பது தெரியாது. நான் இப்போது 1 முதல் 3 பிரதிவாதிகளுக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி 10.11.2017 2ம் பிரதிவாதிக்கு மனு கொடுத்ததன் பேரில் 3ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.8 குறிப்பாணை அனுப்பப்பட்டது என்றால் சரிதான். பொதுவாக அலுவலக குறிப்பாணைக்கு தனியாக கோப்பு எண் கொடுக்கப்பட்டு கோப்புகள் பராமரிக்கப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஐ பொறுத்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.9 ஐ பொறுத்து நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வா.சா.ஆ.11 ஆவணம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து 3 பிரதிவாதி அலுவலகத்தில் பெறப்பட்ட ஆவணம். வா.சா.ஆ.9, மற்றும் 11 ஐ பொறுத்து எனது அவலகத்தில் வரிசை எண் கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா,ஆ.9 மற்றும் 11 ஆவணங்களை பொறுத்து எனது அலுவலகத்தில் பார்வையிட்டு அது சம்மந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறித்து கூற முடியுமா என்றால் பார்வையிட்டு கூற முடியும் தற்போது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற விபரம் தெரியாது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**